செய்தி வெளியீடு எண்: 522 நாள்: 10.03.2024

# செய்தி வெளியீடு

## பட்டுவளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், மூன்று சிறந்த தானியங்கி மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்கள், முதல் முறையாக மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு மொத்தம் 9 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகைக்கான காசோலைகளை 12 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள், சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் முதல் முறையாக சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார்.

2023–24ஆம் ஆண்டிற்கான பட்டுவளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், நமது மாநிலத்தில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய் மற்றும் 50,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் எனவும், தரமான பட்டு நூல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய் மற்றும் 50,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் எனவும், தரமான விதைப் பட்டுக்கூடு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் முதல் முறையாக மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய் மற்றும் 50,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் என்றும், இதற்கென 9 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, **மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பட்டு விவசாயிக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. க. ஜெயந்தி அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மு. பூபதி அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வை. அருள்குமரன் அவர்களுக்கும்;

**மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளருக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.மு.முகமது மதீனுல்லா அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரா. பெருமாள் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜெ. ராம்சங்கர் அவர்களுக்கும்;

**மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பலமுனை பட்டு நூற்பாளருக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மு. சாந்தமூர்த்தி அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நா. நாகராஜன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜெ. வேதவள்ளி அவர்களுக்கும்;

**முதல் முறையாக மாநில அளவில் சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளருக்கு பரிசுகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட** கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சி. திலீப் குமார் அவர்களுக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், திரு. சி. கிருஷ்ணப்பா அவர்களுக்கு இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும், திரு. நா. மஞ்சுநாதா அவர்களுக்கு மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும்;

என மொத்தம் **12** விருதாளர்களுக்கு **9** இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திரு. சந்திர சேகர் சாகமுரி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in